தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
&
இந்தியவானிலைத்துறை
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
கோயமுத்தூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண்
அறிக்கை
(17.05.2023 முதல் 21.05.2023)

அறிக்கைஎண் 039/2023

தேதி.16..05.2023

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 31°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 21°செ முதல் 27°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

கோயமுத்தூர் மாவட்டத்தின் 12.05.23 முதல் 15.05.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 35°செமுதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 13-17 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (12.05.2023 முதல் 15.05.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 21.05.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12/05 | 13/05 | 14/05 | 15/05 | தேதி | நாள்-1 17/05 | நாள்-2 18/05 | நாள்-3 19/05 | நாள்-4 20/05 | நாள்-21/0 |
| 3.2 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 3 | 6 | 3 | 6 | 3 |
| 35 | 35 | 35 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 35 | 35 | 36 | 35 |
| 25 | 25 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 24 | 25 | 25 |
| 6 | 6 | 4 | 4 | மேக மூட்டம் (ஆக்டர்) | 5 | 5 | 5 | 3 | 4 |
| 83 | 78 | 80 | 75 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 60 | 70 | 70 |
| 66 | 57 | 61 | 55 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| 13 | 17 | 16 | 17 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 10 | 8 | 10 |
| 200 | 200 | 200 | 200 | காற்றுவீசும் திசை | 230 | 230 | 250 | 230 | 230 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (17.05.2023 முதல் 21.05.2023)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாகஉள்ள அடுத்தஐந்துநாட்களுக்கானமழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 17-05-2023 | 8.0 | 1.0 | 2.0 | 3.0 | 2.0 | 1.0 | 6.0 | 6.0 | 1.0 | 1.0 | 1.0 | 3.0 |
| 18-05-2023 | 16.0 | 6.0 | 6.0 | 9.0 | 6.0 | 5.0 | 13.0 | 13.0 | 5.0 | 6.0 | 5.0 | 8.0 |
| 19-05-2023 | 16.0 | 2.0 | 3.0 | 7.0 | 4.0 | 2.0 | 12.0 | 12.0 | 2.0 | 4.0 | 2.0 | 5.0 |
| 20-05-2023 | 18.0 | 4.0 | 6.0 | 9.0 | 7.0 | 5.0 | 14.0 | 14.0 | 4.0 | 4.0 | 4.0 | 9.0 |
| 21-05-2023 | 10.0 | 2.0 | 3.0 | 4.0 | 2.0 | 2.0 | 7.0 | 7.0 | 1.0 | 2.0 | 1.0 | 3.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான தூறல் மழையுடன் காற்றின் வேகம் 6 -10 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>எதிர்பார்க்கப்படும் மழையினை சரிவுக்கு குறுக்காக கோடை உழவுசெய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் மண் அரிப்பினையும் தடுக்கலாம்.<br>தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பதனை மழையில்லா நேரங்களில் செய்து முடிக்கவும்.<br>மண்ணின் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதன் மூலம் அதிக வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம். |
| நெல் | நாற்றாங்கால் | மழை எதிர்பார்க்கப்படுவதால் குறுகிய கால நெல் சாகுபடிக்கு நாற்றாங்கால் தயார் செய்து விதைக்கவும். |
| சோளம் | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி சோளத்திற்கு, ஒரு எக்டருக்கு 50 கிலோ யூரியா என்ற அளவில் இரண்டாவது மேலுரமாக இடவும். |
| கம்பு | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி கம்பு பயிரில் கைக்களையெடுத்து, ஒரு எக்டருக்கு 90 கிலோ யூரியா என்ற அளவில் முதல் மேலுரமாக இடவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான சூறைக்காற்றும் |

| | | |
|---|---|---|
| | | தோகை உரித்து விட்டம் கட்டவும். |

| | | |
|---|---|---|
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மழையுடன் வேகமான சூறைக்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| மஞ்சள் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி தகுந்த வடிகால் வசதியுடன் மஞ்சள் நடவு செய்யவும். தேவைப்பட்டால் மண்ணின் ஈரத்தை பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |
| மரவள்ளிக்கிழங்கு | அறுவடை | பெய்துள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யலாம். |
| கால்நடைகள் | | மழையுடன் இடி மின்னலும் எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாக்க கொட்டைகளுக்குள் கட்டவும். |

### குறுஞ்செய்தி

- தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பதனை மழையில்லா நேரங்களில் செய்து முடிக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**